
# சட்டவிரோத வெளிநாட்டு வர்த்தகர்கள் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்






கோலாலம்பூர், ஏப். 10- சட்டவிரோதமாக வர்த்தகத்தில் ஈடுபட்டிருக்கும் வெளிநாட்டவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

அதே சமயத்தில் தங்களின் வர்த்தக உரிமங்களை வெளிநாட்டவர்களுக்கு வாடகைக்கு விடுவது அல்லது விற்று விடுவது கண்டு பிடிக்கப்பட்டால் உள்நாட்டு வர்த்தகர்கள் தண்டிக்கப்படு வார்கள் என்று கோலாலம்பூர் மாநகர மேயர் மைமுனா ஷாரிப் எச்சரித்தார்.

கோலாலம்பூர் மாநகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் வெளிநாட்டவர்கள் சட்டவிரோதமாக வர்த்தகத்தில் ஈடுபட்டு வருவது அதிகரித்து கொண்டிருக்கிறது.

குறிப்பாக கோலாலம்பூர் பொது மொத்த சந்தை மற்றும் சில்லறை சந்தைகளில் இவர்கள் சட்டவிரோதமாக கடைகளை அமைத்து கொண்டு வியாபாரம் செய்து கொண்டிருப்பதாக புகார்கள் வெளியாகி கொண்டிருக்கின்றன.

உள்நாட்டு வர்த்தகர்களின் வியாபாரத்திற்கும் வருமானத்திற்கும் இந்த அந்நிய தொழிலாளர்கள் பெரும் மிரட்டலாக இருக்கின்றனர் என்று மைமுனா கூறினார்.

இந்த சட்டவிரோத வெளிநாட்டு வர்த்தகர்களை அடையாளம் கண்டு அவர்களை கூண்டோடு கைது செய்ய கோலாலம்பூர் மாநகராட்சி மன்றம் நடவடிக்கைகளை எடுத்து கொண்டிருக்கிறது.

குடிநுழைவு இலாகா, சுங்க இலாகா, காவல்துறை, சுகாதார அமைச்சு ஆகியவற்றுடன் இணைந்து நாங்கள் நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்.

கடந்த மாதம் ரமலான் சந்தையின் போது லைசென்ஸ் இல்லாமல் வியாபாரம் செய்த பலூன் வியாபாரிக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டது. உள்நாட்டைச் சேர்ந்த அவர் மீது நடவடிக்கை எடுத்து இருக்கின்றனர்.

ஆனால் சட்டவிரோத வெளிநாட்டு வர்த்தகர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுவது கிடையாது என்று புகார் கூறுகின்றனர்.

ஆனால் இந்த விவகாரத்தில் கோலாலம்பூர் மாநகராட்சி மன்றம் கடுமையாகவும் நியாயமாகவும் நடந்து கொள்ளும் என்று மைமுனா தெரிவித்தார்.